

திருச்சி மாவட்டம், மணப்பாறை திண்டுக்கல் மெயின் சாலையில் மாட்டுச்சந்தை அருகே முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞரின் சிலை திறப்பு விழா நடைபெற்றது. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திராவிடர் கழகத் தலைவர் வீரமணி கலந்து கொண்டு சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சபியுல்லா, சேகரன், வண்ணை அரங்கநாதன், மாவட்ட கழக அவை தலைவர் கோவிந்தராஜ், மாவட்ட பொருளாளர் குணசேகரன், மணப்பாறை நகரக் கழகச் செயலாளர் மு.ம.செல்வம், மணப்பாறை நகர மன்ற தலைவர் கீதா மைக்கேல் ராஜ், மணப்பாறை ஒன்றிய கழகச் செயலாளர் ராமசாமி, மணப்பாறை ஒன்றிய குழு தலைவர் அமிர்தவள்ளி, மற்றும் மாவட்ட, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் திரளானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தர்மபுரி நகர தி.மு.க. சார்பில் நகரை ஊர்வலமாக வந்து அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து பின் காந்தி சிலை முன்பு நடைபெற்ற நிகழ்ச்சியில் 100 வயது மூதாட்டிக்கு இனிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகளை நகரச் செயலாளர் நாட்டான் மாது வழங்கினார். உடன் மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி, நகராட்சி தலைவர் லட்சுமி நாட்டான் மாது, நகர துணை செயலாளர் முல்லைவேந்தன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் மே.அன்பழகன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### இந்த நிதியாண்டில் – பிப்ரவரி மாதத்தில் மட்டும்

# பதிவுத் துறை வரலாற்றில் ரூ.1812 கோடி வருவாய் பெற்று புதிய சாதனை!

## பதிவுத் துறை அரசு செயலாளர் தகவல்!

*சென்னை, மார்ச் 4 -*

*2023- 24ஆம் நிதி யாண்டில் இந்த வருடம் பிப்ரவரி, 2024 மாதத்தில் மட்டும் ரூ.1,812.70 கோடி வருவாயை பதிவுத்துறை ஈட்டியுள்ளது. சென்ற நிதியாண்டில் பிப்ரவரி, 2023ல் அடைந்த வருவாய் ரூ.1,593.95 கோடியை விட இது ரூ.218.74 கோடி அதிகமாகும்.*

*இந்த நிதியாண்டில் பிப்ரவரி, 2024 முடிய மொத்தம் ரூ.16,653.32 கோடி வருவாய் பதிவுத்துறையால் ஈட்டப்பட்டுள்ளது. இது சென்ற நிதியாண்டில் பிப்ரவரி, 2023 வரை அடைந்த வருவாய் ரூ.15,481.72 கோடியை விட ரூ.1171.60 கோடி (7.57%) அதிகமாகும்.*

*ஜியோ கோஆர்டினேட்ஸ் உடன்கூடிய புகைப்படத்தை கிரைய ஆவணத்துடன் இணைத்து ஆவணப்பதிவு மேற்கொள்ளும் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளதால் கட்டட மதிப்பிற்கான முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக்கட்டணம் செலுத்துவதை தவிர்க்கும் நோக்கில் கட்டடங்களை மறைத்து ஆவணம் பதிவு செய்வது தடுக்கப்பட்டுள்ளது. இதனால் கட்டடங்களின் மதிப்புக்கான உரிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் அரசுக்கு செலுத்தப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*முதலீடுகளின் வளர்ச்சி,* தனிநபர் வருவாய் பெருக்கம் ஆகியவற்றின் காரணமாக பதிவுத்துறையில் இதை விடவும் கூடுதலான வருவாய் இந்த நிதியாண்டில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடந்த டிசம்பர் மாதம் சென்னை மற்றும் தென்மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக மனைகளின் விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ளநீர் ஒரு சில நாட்களில் வடிந்துவிட்ட போதிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் மனைகளை வாங்க பொதுமக்கள் தயங்குவதால் மனைகளின் ஆவணப்பதிவு குறைந்துள்ளது. இதனால் கூடுதலாக எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வராமல் போனது. இந்நிலையிலும் பதிவுத்துறை கடந்த ஆண்டில் இதே பிப்ரவரி மாதம் வரையிலான காலகட்டத்தில் ஈட்டிய ரூ.15,481.72 கோடியை விட கூடுதலாக ரூ.1171.60 கோடி அதாவது ரூ.16653.32 கோடி வருவாயை ஈட்டியுள்ளது இது வரை எய்தப்பட்ட அதிக வசூல் சாதனையாகும்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் முன்பு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் பொதுமக்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் இனிப்புகள் வழங்கி பட்டாசுகள் வெடித்து கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுக்கு கோவை மாநகர மாவட்ட தி.மு.க. வழக்கறிஞரணி அமைப்பாளர் அன்புச்செழியன் தலைமை தாங்கினார். இந்த நிகழ்ச்சியில் தி.மு.க. மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, அரசு குற்றவியல் வழக்கறிஞர் வி.ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினர். வழக்கறிஞர்கள் அணி நிர்வாகிகள், மருதுபாண்டியன், மணிவேல், விக்ரம், சலாவுதீன், ஆசைத்தம்பி,எலிசபெத் ராணி மற்றும் அரசு வழக்கறிஞர்கள் சிவக்குமார்,கணேசன், கண்ணன், ராஜப்பிரியா,கழக மூத்த வழக்கறிஞர்கள் ஜி.டி. ராஜேந்திரன், என்.கனகராஜ்,எஸ்.ரவிச்சந்திரன், தமிழ்ச்செல்வி, எஸ்.சந்திரமோகன் உள்பட 200க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## 169 அ வட்டத்தில் அறுசுவை உணவு!

*சென்னை, மார்ச் 4 -*

*தமிழக முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பரமணி யன் அவர்களின் வழிகாட்டுதலின் படி சைதை கிழக்கு பகுதி 169(அ) வட்டத்தில் பேன்பேட்டை தாடண்டர் நகர் அரசுப் பண்னை ஜோதிம்மாள் நகர் மசூதி தோட்டம் அப்பாவு நகர் சுப்பு பிள்ளை தோட்டம் காந்திபுரம் மாடல்ஹட் மன்ட் ரோடு ஆகிய பகுதிகளில்தலைமை பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் உணவு வழங்கினார்!*

*இந்நிகழ்வில் மாவட்ட கழக உறுப்பினர்கள் வட்ட கழகநிர்வாகிகள்அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.*



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றியம் அப்பம்பட்டு ஊராட்சியில் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் திண்ணைப் பிரச்சாரத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.




பவானி கிட்டு (எ) .சீ.கிருட்டினசாமி

# 23-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

4.3.2024

# பவானி கிட்டு (எ)
# ப.சீ.கிருட்டினசாமி

முன்னாள் நகர கழக செயலாளர்,தலைமை செயற்குழு உறுப்பினர், பவானி நகர திமுக

சு.முத்துசாமி
வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர்

என்.நல்லசிவம் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர்

மனைவி - K.ராஜம்மாள்

தம்பி - ப.சீ.நாகராசன் பவானி நகர கழக செயலாளர்

மனைவி - N.சந்திரா நாகராசன்

மகன் - K.செங்குட்டுவன் B.E., மருமகள் - S.ரங்கநாயகி B.sc.,

மகன்-N.இளங்கோ B.E., மருமகள் - E.சிந்தூரி B.E., /M.C. பவானி நகர மன்ற தலைவர்

பேத்தி - S.வாசுகி B.Tech., மதிவாணன் USA,

பேரன்கள் - S.கிருஷ்ணராஜ், E.S.கிருத்திக், E.S.நித்விக்

இளைஞரணி மற்றும் சார்பு அணிகள்

பவானி நகர திமுக, ஈரோடு மாவட்டம்

உதயம் நண்பர்கள் குழு, பவானி